புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=======================================================================

# கார்நாற்பதில் இசை உரிச்சொற்கள்

**ஆய்வாளர்**
*மு.விஜயலட்சுமி, (Ph.D., Ref.No.MKU22FFOL10317)*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,*
*தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),*
*சிவகாசி – 626 123.*

**நெறியாளர்**
*முனைவர் ப.மீனாட்சி,*
*தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,*
*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,*
*தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*சிவகாசி - 626 123.*
***(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)***

=======================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களுள் சொல்லிலக்கணம் இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது. எழுத்துக்கள் இல்லையேல் சொற்கள் இல்லை. சொற்கள் இல்லையேல் மொழி இல்லை. எனவே, ஒரு மொழியின் வளர்ச்சிக்கு சொற்கள் இன்றியமையாததாகும். சொற்களை தொல்காப்பியர் பெயர், வினை, இடை, உரி என நால்வகைப்படுத்துகிறார். நால்வகைச் சொற்களுள் ஒன்றாகத் திகழும் உரிச்சொற்களுக்கு இலக்கணம் வகுத்து அச்சொற்களுக்காளப் பொருள்களையும் பட்டியலிடுகிறார். மேலும் உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பின் அடிப்படையில் பிறக்கும் என்ற கருத்தினையும் முன்வைக்கிறார். பதினெண் கீழ்க்கணக்கு அக நூல்களுள் ஒன்றாகத் திகழும் கார்நாற்பதில், தொல்காப்பிய உரிச்சொற்களும் தொல்காப்பியர் இலக்கண விதிகளின் படி அமைந்திருக்கின்ற புதிய உரிச்சொற்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் கார்நாற்பதில் பதிவு செய்யப்பட்டுள்ள தொல்காப்பிய இசை உரிச்சொற்களையும் தொல்காப்பிய விதியின் படி அமைந்த புதிய இசை உரிச்சொற்களையும் எடுத்துரைப்பதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*

***முன்னுரை:***

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அகம் பற்றிப் பாடும் நூலாக கார்நாற்பது விளங்குகின்றது. தலைவன் வினை முடிந்து, கார்காலத்திற்குள் மீண்டு வருவேன் என்று தலைவியிடம் கூறிச் சென்றதாலும் இதில் நாற்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளமையாலும் இந்நூல் கார்நாற்பது என்னும் பெயரினைக் கொண்டது. புலவர்கள் தம் உள்ளத்தினுள் உதித்த எண்ணங்களை மொழிகளின் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். பலவித எழுத்துக்கள் மற்றும் சொற்களின் கூட்டுக் கலவையே மொழியாகும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து சொற்களை உருவாக்குகிறது. அச்சொற்களை பெயர், வினை, இடை, உரி என தொல்காப்பியர் நான்கு வகைப்படுத்துகிறார். நால்வகைச் சொற்களுள் ஒன்றாகத் திகழும் உரிச்சொல் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டது. அத்தகைய உரிச்சொற்களுள் இசையினை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் இசை உரிச்சொற்களை கார் நாற்பது நூல் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***ஆய்வு நெறிமுறைகள்:***

***தொல்காப்பியத்தில் சொற்களுக்கான இலக்கணம்:***

*எழுத்துக்களால் அமைவது சொல். சொல்லப்படுவதால் சொல் என்பது காரணப் பெயராகும். இது மொழி, கிளவி, வார்த்தை என்னும் வேறு பெயர்களாலும் சுட்டப்பெறும். சொல்லிற்கு தொல்காப்பியர் கூறும் இலக்கணம் பின்வருமாறு, சொற்கள் அனைத்தும் ஏதேனும் ஒரு பொருளினை உணர்த்தியே வருகின்றன என்பதை,*

***"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"[1]***

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-103)***

*என்னும் நூற்பாவின் வாயிலாக அறிய முடிகிறது. சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நால்வகைப்படும் என்பதை,*

***"சொல்லெனப் படுப பெயரே வினையென்று***
***ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே"[2]***

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-105)***

***"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்***
***அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப"[3]***

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-106)***

*என்னும் நூற்பாக்களின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.*

***சொற்கள் பொருளுணர்த்தும் முறை:***

*சொற்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளினை உணர்த்தி வரும் என்பதை,*

***"தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்***
***இருபாற் றென்ப பொருண்மை நிலையே"[4]***

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-105)***

*என்னும் நூற்பாவின் வாயிலாக அறிய முடிகின்றது.*

***தொல்காப்பியத்தில் உரிச்சொற்களுக்கான இலக்கணம்:***

*அகத்தியரின் மாணவரான தொல்காப்பியரால் இயற்றப்பட்டது தொல்காப்பியம். தமிழில் கிடைத்த மிகப் பழமையான இலக்கண நூலாக தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியம் எழுத்து, சொல் மற்றும் பொருளிற்கான இலக்கணங்களைக் கூறுகின்றது. உரிச்சொல் குறித்து ,*

***"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை***
***இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்***
***பெயரினும் வினையினும் மெய்தடு மாறி***
***ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்***
***பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்***
***பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்***
***தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்***
***எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்"[5]***

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-185)***

*என்னும் நூற்பாவின் வாயிலாக,*

*1) உரிச்சொல்லானது இசை, குறிப்பு, பண்பெனும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும்.*

*2) பெயர் போலவும் வினை போலவும் தம் உருபு தடுமாறும்.*

*3) ஒரு சொல் பல பொருளைப் பெற்று வரும்.*

*4) பல சொல் ஒரு பொருளைப் பெற்றும் வரும்.*

*5) கேட்பவரால் பயிலப்படாத சொல்லைப் பயின்றப் பொருளோடு சார்த்திப் பொருளை உணர்த்தும்.*

*6) தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையுமாகிய நிலைக்களன்களால் வேறுவேறு பொருள்களை உணர்த்தும் என்பதை அறிய முடிகிறது. முத்து வீரியமும் தொல்காப்பியமும் உரிச்சொல் குறித்து ஒரே விதமான கருத்துக்களைத் தெரிவிக்கிறது.*

***"தமக்கியல்பில்லாத இடைச்சொற் போலாது இசை குறிப்புப் பண்பெனும் பொருட்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல்லாயிற்று"[6] (தொல்(சொல்);கி.ராசா;ப-102)*** *என்று சேனாவரையர் உரிச்சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறார்.* ***"நால்வகைச் சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வரும் சொற்கள் உரிச்சொற்கள். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்***

***உணர்த்துவதற்குத் தாமே உரியன ஆதலின் உரிச்சொல் என்று பெயர் பெற்றது”[7] (நன்னூல்(சொல்); ச.திருஞானசம்பந்தன்;ப-128)*** *என்றும் கூறலாம் என தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரையெழுதிய முனைவர் ச.திருஞானசம்பந்தம் குறிப்பிடடுள்ளார். தொல்காப்பியர் பலரறிய வழங்கப்படும் உரிச்சொற்களை எடுத்துரைக்காமல், யாருக்கும் தெரியாத உரிச்சொற்களையும் அவற்றிற்குரிய பொருளினையும் மட்டுமே தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பதை,*

**“வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா**
**வெளிப்பட வாரா உரிச்சொல் மேன”[8]**

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-156)***

*என்னும் நூற்பாவின் வழி அறிய முடிகின்றது. வழக்கில் பயனப் டுத்தாத பலருக்குத் தெரியாத உரிச்சொற்களை மட்டுமே தொல்காப்பியர் விளக்குகின்றார்.*

***உரிச்சொல்லுக்குப் புறனடை:***

*குறிப்பிட்ட விதிகளுக்கு அப்பாற்பட்டவைகளைப் பொருத்திக் காட்ட உதவுவது புறனடை. உரியியலுக்கானப் புறனடையும் சொல்லிலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் கூறிய உரிச்சொற்கள் மட்டுமல்லாது உரிச்சொல்லிற்கான இலக்கணங்களைப் பெற்று வரும் பிற சொற்களும் உரிச்சொற்களாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை,*

**“அன்ன பிறவுங் கிளந்த அல்ல**
**பன்முறை யானும் பரந்தன வரூஉம்**
**உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட**
**இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்**
**வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து**
**ஓம்படை ஆணையிற் கிளந்தவற் றியலான்**
**பாங்குற உணர்தல் என்மனார் புலவர்”[9]**

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-201)***

*என்னும் நூற்பா உணர்த்துகிறது.*

*தொல்காப்பியர் குறிப்பிடாத உரிச்சொல்லுக்குரிய இலக்கண விதிகளின் படி பொருந்துகின்ற பிற சொற்களையும் உரிச்சொற்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இந்நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

***தொல்காப்பிய இசை உரிச்சொற்கள்:***

*இசை என்பது செவியால் உணரப்படும் ஒலிப்பொருண்மைச் சொற்களுக்கானது. தொல்காப்பியர் உரியியல் பகுதியில் மொத்தம் 120 உரிச்சொற்களை குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்பது உரிச்சொற்கள் இசை உரிச்சொற்களாக இடம்பெற்றுள்ளன.*

| ***வ.எண்*** | ***இசை உரிச்சொல்*** | ***பொருள்*** |
|---|---|---|
| *1.* | கம்பலை | அரவப்பொருள் |
| *2.* | சும்மை | |
| *3.* | கலி | |
| *4.* | அழுங்கல் | அரவப்பொருள்,இரக்கம்,கெடுதி |
| *5.* | இசைப்பு | இசைக்குறிப்பு |
| *6.* | துவைத்தல் | இசைப்பொருள் |
| *7.* | சிலைத்தல் | |
| *8.* | இயம்பல் | |
| *9.* | இரங்கல் | இசைப்பொருள்,கவலை |

*இவ் ஒன்பது இசை உரிச்சொற்களுள் அழுங்கல், இரங்கல் என்னும் இரண்டு உரிச்சொற்களும் இசை உரிச்சொல்லாகவும் குறிப்பு உரிச்சொல்லாகவும் இடம்பெற்றுள்ளன.*

***கார் நாற்பதில் இடம்பெறும் தொல்காப்பிய இசை உரிச்சொற்கள்:***

- *இரங்கல்*
- *கலி*

***இரங்கல்:***

*இரங்கல் என்னும் சொல் இசையைக் குறிப்பதற்காகவும் கழிந்த பொருட்டும் அதாவது கவலையைக் குறிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை,*

**"துவைத்தலுஞ் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்**
**இசைபொருட் கிளவி என்மனார் புலவர்"[10]**

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-195)***

**"அவற்றுள்**
**இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்"11**

***(மேலது,ப-195)***

*என்னும் நூற்பாக்களின் வழி அறிய முடிகிறது.*

***இரங்கல்:***

*தலைவன் வினைமேற்கொண்டு நீண்ட தூரம் பிரிந்து சென்றார் என்றெண்ணி வருந்திய தலைவியை ஆற்றுவிக்கும் பொருட்டு மேகமானது, கார்காலம் வந்துவிட்டது உன் தலைவனும் வந்துவிடுவான் என்ற வெற்றிச் செய்தியை இடிஇடித்து கூறியது என்பதை,*

*"சென்றநங் காதலர் சேணிகந்தார் என்றெண்ணி*
*ஒன்றிய நோயோடு இடும்பை பலகூர*
*வென்றி முரசின்* ***இரங்கி*** *எழில்வானம்*
*நின்றும்* ***இரங்கும்*** *அவட்கு."[12]*

***(கார்நாற்பது ; பாடல்-35)***

*என்னும் பாடல் உணர்த்துகிறது.*

*இப்பாடலில் மூன்றாமடியில் இடம்பெற்றுள்ள இரங்கி என்னும் சொல் ஒலி என்னும் பொருளில் இசை உரிச்சொல்லாக அமைந்துள்ளது. நான்காமடியில் இடம்பெற்றுள்ள இரங்கும் என்னும் சொல் கவலையை நீக்கல் என்னும் பொருளில் குறிப்பு உரிச்சொல்லாக இடம்பெற்றுள்ளது.நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி இரங்கல் என்னும் சொல்லிற்கு "அழுதல், உருகல், ஒலித்தல், துன்பப்படல், பரிதபித்தல்"[13]ஆகிய பொருண்மையினை வழங்குகின்றது. (நா.கதிரைவேற்பிள்ளை;தமிழ் அகராதி;ப-209) தற்காலத்தில் இரங்கல் என்னும் சொல் கருணை, தம் நிலையிலிருந்து தாழல், உருகல், வருத்தம் முதலான பொருண்மைகளைக் குறிக்கிறது.*

***கலி:***

*கலி என்னும் சொல் அரவப் பொருளினை குறிக்கிறது என்பதை,*

**"கம்பலை சும்மை கலியே அழுங்கல்**
**என்றிவை நான்கும் அரவப் பொருள."[14]**

***(தொல்(சொல்);சேனாவரையர்;ப-193)***

*என்னும் நூற்பா குறிப்பிடுகிறது.*

*பெரிய தோள்களை உடைய தலைவியின் உடலிலுள்ள பசலை நீங்கவும் கரிய குயில்கள் துன்பமுறவும் மயில்கள் மகிழ்ந்து ஆடவும் பெரிய ஒலியையுடைய மேகங்கள் முழங்குகின்றன என்பதை,*

*"கருங் குயில் கையற மாமயில் ஆல*
*பெருங்***கலி** *வானம் உரறும் - பெருந்தோள்!*
*செயலை இளந்தளிர் அன்ன நின்மேனிப்*
*பயலை பழங்கண் கொள"[15]*

***(கார்நாற்பது ; பாடல்-35)***

*என்னும் பாடல் விளக்குகின்றது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள கலி என்னும் சொல் இடியோசையைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.*

| **வ.எண்** | **தொல்காப்பிய இசை உரிச்சொற்கள்** | **பொருள்** | **பொருள் மாற்றம்** |
|---|---|---|---|
| *1.* | கலி | அரவப்பொருள் | - |
| *2.* | இரங்கல் | இசை, கவலை | - |

*மேற்கண்ட அட்டவணையில் அமைந்துள்ள கலி, இரங்கல் என்னும் இரண்டு தொல்காப்பிய உரிச்சொற்களும் தொல்காப்பியர் கூறிய அதே பொருண்மையில் கார்நாற்பதில் இடம்பெற்றுள்ளன.*

***கார்நாற்பதில் புதிய உரிச்சொற்கள்:***

*ஒலித்தலைச் சுட்டுவன, பேச்சொலிகளைச் சுட்டுவன, வண்டு உள்ளிட்ட உயிர்களின் ஒலியைச் சுட்டுவன. கல், ஒல், இழும் போன்று ஒலிக்குறிப்புச் சொற்களாக அமைவன, ஆரவாரத்தின் பெயர்களாக வரும் சொற்கள் எல்லாம் இசை உரிச்சொற்களாகக் கருதப்படுகிறது. கார்நாற்பதில் இடம்பெறும் புதிய இசை உரிச்சொற்களைப் பற்றி காண்போம்.*

***ஒலியைச் சுட்டும் சொற்கள்:***

***ஊதும்:***

*மயில்கள் மங்கையரைப் போன்று அழகு பெறவும் காடுகள் அழகு பெற கொன்றை மலர்கள் பூத்து குலுங்கவும் இசைபாடும் வண்டிங்கள் மலர்களில் தேனெடுக்கவும் ஏற்ற பருவமானது வந்துவிட்டது. இந்தப் பருவமானது தலைவியின் வருத்தத்தினைப் போக்கும் காலமாக அமையும் என்பதை,*

*“ஆடு மகளிரின் மஞ்ஞை யணிகொளக்*
*காடுங் கடுக்கை கவின் பெறப் பூத்தன*
*பாடுவண் **டூதும்** பருவம் பணைத்தோளி*
*வாடும் பசலை மருந்து”*[15]

***(கார்நாற்பது ; பாடல்-4)***

*இப்பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில் இடம்பெறும் ஊதும் என்னும் சொல் வண்டுகளின் ஒலியைக் குறிக்கும் சொல்லாக இடம்பெற்றுள்ளது என்பதை தெளிவாக அறியமுடிகிறது.*

***உறறும்:***

*தலைவியைப் பிரிந்த தலைவனிடம் மேகமானது நீண்ட வழியில் சென்ற நீ காலம் தாழ்த்தமால் வந்து விடு எனக் கூறி முழங்குகிறது என்பதாக, ஆசிரியர் கற்பனை நயமிக்க பாடலை படைத்துள்ளார் என்பதை,*

*“தொடியிட வாற்றா தொலைந்ததோள் நோகக்*
*வடுவுடைப் போழ்ந்தகன்ற கண்ணாய் வருந்தல்*
*கடிதிடி வானம் **உறறும்** நெடுவிடைச்*
*சென்றாரை நீடன்மி னென்று”*[16]

***(கார்நாற்பது ; பாடல்-6)***

*இப்பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில், உறறும் என்னும் சொல் வானத்திலிருந்து எழும் ஓசையைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வானத்திலிருந்து இடி ஒலிக்க, அதற்கெதிராக எருமையானது சினங்கொள்ள, தலைவனின் தேர் விரைவாக கான்யாற்று ஒலியைப் போல தலைவியின் மேனி தழைக்க வருகிறது என்பதை,*

*“வானேறு வானத் **துரற** வயமுரண்*
*ஆனேற் றொருத்த லதனோ டெதிர் செறுப்பக்*
*கான்யாற்று ஒலியில் கடுமான்தேர் என்தோழி*
*மேனி தளிர்ப்ப வரும்”*[17]

***(கார்நாற்பது ; பாடல்-10)***

*என்னும் பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில் உறறும் என்னும் சொல் வானத்திலிருந்து எழும் ஒலியைக் குறிப்பதற்காகவும் ஒலி என்னும் சொல் காட்டாற்று ஒலியினைக் குறிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***குரல்:***

*மேகமானது பறையோசையை போன்று இடியோசையை எழுப்புகிறது என்பதை,*

*“அறைக்கால் இறுவரை மேல் பாம்பு சவட்டிப்*
*பறைக்**குரல்** ஏறொமு பௌவம் பருகி*
*உறைத்திறன் கூர்ந்தன்று வானம் பிறைத்தகை*
*கொண்டன்று பேதை நுதல்”18*

***(கார்நாற்பது ; பாடல்-17)***

*என்னும் பாடல் அறிவுறுத்துகிறது. குரல் என்ற சொல் இசைக்கருவியிலிருந்து எழும்பும் ஒலியினைக் குறிக்கிறது.*

***இமிழ், முழங்கல்:***

*ஒலிக்கும் ஒலியையுடைய மேகமானது முழங்குகிறது என்பதை,*

"**இமிழி**சை வானம் முழங்கக் குமிழின்பூப்
பொன்செய் குழையின் துணர்தூங்கத் தண்பதஞ்
செவ்வயுடைய சுரநெஞ்சே காதலியூர்
கவ்வை யழுங்கச் செலற்கு"[19]

**(கார்நாற்பது ; பாடல்-28)**

என்னும் பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் இமிழ், இசை, முழங்கல் என்னும் மூன்று சொற்களும் இசையுரிச் சொற்களாக இடம்பெற்றுள்ளன.

| வ.எண் | புதிய இசை உரிச்சொற்கள் | பொருள் |
|---|---|---|
| 1. | ஊதும் | வண்டுகளின் ஒலி |
| 2. | உரறும் | இடியோசை |
| 3. | குரல் | பறையோசை |
| 4. | இமிழ் | இடியோசை |
| 5. | முழங்கல் | இடியோசை |

கார்நாற்பதில் புதிய உரிச்சொற்களாக ஊதும், உரறும், குரல், இமிழ், முழங்கல் ஆகிய சொற்கள் அமைந்துள்ளன என்பதை மேற்கண்ட அட்டவணையின் வாயிலாக அறிய முடிகிறது.

**முடிவுரை:**

இசை, குறிப்பு, பண்பினை அடிப்படையாகக் கொண்டு தோன்றுபவை உரிச்சொல். கார்நாற்பதில் தொல்காப்பிய இசை உரிச்சொற்களாக கலி, இரங்கல் என்னும் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியர் குறிப்பிடும், உரிச்சொற்களுக்கான இலக்கண விதிகளைப் பெற்றிருக்கும் புதிய உரிச்சொற்களாக ஊதும், குரல், இமிழ், முழங்கல், உரறும் ஆகிய சொற்கள், ஒலியைச் சுட்டும் உரிச்சொற்களாக கார்நாற்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கலி, இரங்கல் என்னும் இரண்டு உரிச்சொற்களும் தறக்காலத்தில் வழக்கில் உள்ளது.

ஊதும் என்னும் சொல் வண்டுகளின் ஒலியினையும் உரறும், இமிழ், முழங்கல் என்னும் சொற்கள் இடியோசையினையும் குரல் என்னும் சொல் பறையோசையினையும் குறிப்பதாக கார்நாற்பதில் இடம்பெற்றுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1) இராசகோபால்.து - கார்நாற்பது மூலமும் தெளிவுரையும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 600 050.

2) சிவலிங்கனார்.அ - தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் உரியியல்,
முதற் பதிப்பு – அக்டோபர் 1987,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ.தரமணி,
சென்னை – 600 113.

3) சுப்பிரமணியன்.ச.வே - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்,
முதற்பதிப்பு : 21, ஜீன் 2010,
மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021.

4) சேனாவரையர் உரை - தொல்காப்பியம் (சொல்லதிகாரம்),
முதற்பதிப்பு : 2005,
சாரதா பதிப்பகம்,
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை – 600 014.

5) திருஞானசம்பந்தம்.ச - பவணந்தி முனிவரின் நன்னூல் – சொல்லதிகாரம்,
முதற்பதிப்பு - நவம்பர் 2009
ராஜா பப்ளிகேஷன்,

*நெ.10,முதல் தளம், இப்ராஹிம் நகர்,*
*காஜாமலை, திருச்சி – 23.*

*6) வீரமாமுனிவர் - சதுரகராதி,*
*உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,*
*7, அதியமான் தெரு, பெருங்குடி,*
*முதற் பதிப்பு – 1987,*
*சென்னை – 600 096.*

*7) கி.ராசா - தொல்காப்பியம் (சொல்),*
*முதற் பதிப்பு : டிசம்பர் 2007.*
*பாவை பப்ளிகேஷன்ஸ்,*
*142,ஜானி ஜான் கான் சாலை,*
*இராயப்பேட்டை, சென்னை – 600 014.*

****** ********** ********** **********